www.Padasalai.Net www.CBSEtips.in

FM

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2023

12 -ஆம் வகுப்பு

## தமிழ்

காலம் : 1.30 மணி

மதுரை - 01.08.23

மதிப்பெண்கள் : 45

---

**I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 X 1 = 5**

1) வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்

இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

2) தமிழில் திணைப்பாகுபாடு......... அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு

இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக் குறிப்பு

3) பொருத்துக.

அ) தமிழ் அழகியல் - 1) பரலி சு.நெல்லையப்பர்

ஆ) நிலவுப்பூ - 2) தி.சு.நடராசன்

இ) கிடை - 3) சிற்பிபாலசுப்பிரமணியம்

ஈ) உய்யும் வழி - 4) கி.ராஜநாராயணன்

4) பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென - தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்

இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

5) ***கூற்று*** : I உயிர்வரின் ஒரு என்பது ஓர் என மாறும்.

***கூற்று*** : II உயிர்வரின் அது என்பது அஃது என மாறும்.

அ) (I) சரி (II) தவறு ஆ) (I) தவறு (II) தவறு

இ) (I) மற்றும் (II) இரண்டும் தவறு ஈ) (I) மற்றும் (II) இரண்டும் சரி

**II எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 X 2 = 4**

6) நகரம் பட்டைத் தீட்டிய வெள்ளை வைரமாகிறது - விளக்கம் தருக.

7) விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.

8) கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

**ஆ. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 X 2 = 4**

9) ஒலிப்பின்னல் என்றால் என்ன?

10) பசுமைக்குடில் வாயுக்கள் என்பவை யாவை?

11) 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?

**III. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 X 2 = 4**

12) ***ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பகுபத உறுப்பிலக்கணம் தருக***

அ) கலங்கி ஆ) உயர்ந்தோர்

13) ***கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக.***

அ) BIOGRAPHY ஆ) PLATFORM



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

14) ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) இனநிரை ஆ) தனியாழி

15) உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.
எலியும் பூனையும் போல

IV. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை தருக. 1 X 4 = 4

16) வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

17) "செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்" தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

V. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை தருக. 1 X 4 = 4

18) பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

19) சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும்-விளக்குக.

VI. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடைதருக 1 X 4 = 4

20) பொருள் வேற்றுமை அணியை விளக்குக.

*(அல்லது)*

கூதிர் பாசறைத் துறையை விளக்குக.

21) *தமிழாக்கம் தருக.*
அ) A new language is a new life.
ஆ) Knowledge of language is the doorway to wisdom.
இ) The limits of my language are the limits of my world.
ஈ) Learning is a treasure that will follow its owner everywhere.

VII. எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடைதருக. 2 X 6 = 12

22) அ) கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் இளந்தமிழ் குறித்துப் பாடியுள்ள செய்திகளைத் தொகுத்து எழுதுக.

*(அல்லது)*

ஆ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

23) அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக. *(அல்லது)*

ஆ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

24) அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரி.

*(அல்லது)*

ஆ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

VIII. மனப்பாடப்பகுதி. 1 X 4 = 4

25) "வையகம் பனிப்ப" எனத் தொடங்கும் நெடுநல்வாடைப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com